தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

12 AUG 1981

திங்கட்கிழமை, 1981 மார்ச் 9.

மாசி 26, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Teachers of Tiruppuvanam Panchayat Union Schools

* 126 *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether it is a fact that House Rent Allowance and City Compensatory Allowance sanctioned to the teachers of eleven schools in Tiruppuvanam Panchayat Union in Ramanathapuram District, from 2nd October 1970 to 31st March 1976 had been stopped at present; and

(*b*) if so, the action taken on the representation made by the teachers of the said schools, which are situated within 16 K.M. from Madurai City?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 11 பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 2—10—1970 முதல் 31—3—1976 வரை வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த வீட்டு வாடகைப் படியும், நகர ஈட்டுப் படியும் இப்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பது குறித்துத் தான் கேள்வி இருக்கிறது. இது பல ஆண்டுகளாகத் தேக்க நிலையில் உள்ளதால், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு உடனடியாக வழங்க மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் ஆணையிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகர எல்லையிலிருந்து 32 கிலோ மீட்டருக்கு உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்களுக்கும், மதுரை போன்ற நகரங்களில் எல்லைகளிலிருந்து 16 கிலோமீட்டருக்கு உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்களுக்கும் வழங்குகின்ற அளவிற்கு ஆணையிட்டிருக்கிறோம். ஆனால் அந்தப் பட்டியலைத் தயாரிப்பதில் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகின்றன. 16 கிலோ மீட்டருக்குள்ளாகவா அல்லது அதற்கு வெளியேவா என்பது குறித்து மறுபடியும் தெளிவுபடுத்தும்படி கேட்டிருக்கிறோம். 16 கிலோ மீட்டருக்குள் அடங்கிய பகுதி என்று சொல்லிவிட்டால், நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப் படி தருவதில் எந்தக் கஷ்டமும் இராது. அந்தப் பட்டியல் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு 2—10—1970-லிருந்து பெற உரிமை பெற்றவர்களாகிறார்கள். அவர்கள் எந்தெந்த ஆண்டு பெறவில்லையோ அந்த ஆண்டுகளுக்குப் பெறுவதற்கு, வாய்ப்புகள் ஏற்படும். எல்லாவற்றுக்கும் அந்தப் பட்டியலைத்தான் எதிர்பார்க்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : 2—10—1970-லிருந்து திட்டவட்டமாக வழங்குவதாக, பரிந்துரை வந்தால் செய்யலாம் என்று சொன்னார்கள். எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் தலைநகரங்களுக்கு 16 கிலோ மீட்டருக்குள் அடங்கிய பகுதிகளுக்கு வழங்க வேண்டுமென்ற கருத்து வந்தபோது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் குறிப்பிட்ட காலத்திற்குள் பட்டியலைப் பெற்று, பரிசீலனை செய்து, ஆணை பிறப்பித்தால் நல்லது. அந்த வகையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து விரிவான அறிக்கை பெற்று, விரைவில் ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று சில குழப்பங்கள் நீங்க வேண்டுமென்று, தெளிவான அறிக்கை கேட்டிருக்கிறோம். நாம் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பட்டியல் திட்டவட்டமாக வந்தால், நடவடிக்கை எடுப்பதில் அரசுக்குச் சிரமம் ஏற்படாது. உடனடியாகப் பட்டியலை அனுப்பும்படி கேட்டிருக்கிறோம். அது வந்தவுடன் கோரிக்கை நிறைவேற்றப்படும்.